# கிறிஸ்துவை இரண்டுமுறை பார்த்தல்

Transcribed from a message spoken in June, 2006 in Chennai

By *R.S.Milton*

கர்த்தரை நாம் இரண்டுமுறை பார்க்க வேண்டும். அதுபோல கர்த்தரை நாம் இரண்டுமுறை கேட்க வேண்டும். சங்கீதத்தில் ஒரு வசனம் இருக்கிறது: "தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்" (சங். 62:11). இது என்ன? இயேசு கிறிஸ்துவை நாம் எப்படிப் பார்க்கிறோம்? எந்த அளவுக்கு நாம் இயேசுகிறிஸ்துவைப் பார்க்கிறோமோ அந்த அளவுக்குத்தான் நாம் இயேசு கிறிஸ்துவை நம் வாழ்க்கையில் வாழ்வோம். அந்த அளவுக்குத்தான் இயேசுகிறிஸ்து நம் வாழ்க்கையில் வெளியாவார். நான் பார்க்காத இயேசுவை நான் என் வாழ்க்கையில் வாழமாட்டேன்; நான் பார்க்காத இயேசு என் வாழ்க்கையில் வெளிவரமாட்டார்.

எத்தனையோ பிரசங்கங்கள்! 10 வருடங்கள், 20 வருடங்கள்! ஆனால், ஒருவர் இப்படிக் கேட்கிறார்: "உங்கள் பெண்ணைக் கல்யாணம் பண்ணுவதற்கு எத்தனை இலட்சம் ரூபாய் தருவீர்கள்?" இதை என்ன சொல்லுவீர்கள்? 10, 20 வருடங்களாவது வேதாகமத்திலிருந்து வசனங்களைக் கேட்டுக் கொண்டிருப்போம். ஒருவேளை நாம் கோபத்திலிருந்து முற்றிலும் விடுபடாமல் இருக்கலாம். ஆனால், பேசுவதே இவர் கோபமாகத்தான் பேசுவார். எப்போது பேசினாலும் இவர் கோபமாகத்தான் பேசுவார் என்றால் நாம் இன்னும் இயேசுகிறிஸ்துவைப் பார்க்கவில்லையென்றுதான் பொருள்.

## பரிசுத்த ஆவியானவரின் வேலை

இயேசுகிறிஸ்துவை நாம் இரண்டு விதத்தில் பார்க்க வேண்டும். ஒன்று பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்திலிருந்து இயேசு கிறிஸ்துவை நமக்குக் காண்பிக்கிறார். இதற்குப் பல வசனங்கள் இருக்கின்றன. கலாத்தியர் 1:16இல் பவுல் கூறுகிறார். "தேவன் தம்முடைய குமாரனை என்னில் வெளிப்படுத்த அவருக்குப் பிரியமாயிருந்தபோது.." யோவான் 16:14 இப்படி கூறுகிறது: "அவர் எனக்குரியவைகளை எடுத்து உங்களுக்குக் காண்பிப்பார்," என்று பரிசுத்த ஆவியானவரைப்பற்றி எழுதியிருக்கிறது. பரிசுத்த ஆவியானவருடைய பிரதானமான வேலை என்ன? இயேசுகிறிஸ்துவைக் காண்பிப்பது. இயேசுகிறிஸ்துவுக்குரியவைகள் இயேசுகிறிஸ்துதான். இயேசு கிறிஸ்துவினுடைய அன்பு அல்லது இயேசு கிறிஸ்துவினுடைய பரிசுத்தம் அல்லது இயேசுகிறிஸ்துவினுடைய நீதி, ஒளி, தாழ்மை, பொறுமை அல்லது இயேசுகிறிஸ்துவினுடைய சிலுவை மரணம், இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல், இயேசுகிறிஸ்துவினுடைய பரமேறுதல், இவையெல்லாமே யார்தான்? இயேசுகிறிஸ்துதான். இவை இயேசுகிறிஸ்துவுக்குப் புறம்பானவை இல்லை. இவை இயேசு கிறிஸ்துவே. பரிசுத்த ஆவியானவருடைய வேலை என்னவென்று கேட்டால் இந்த இயேசு கிறிஸ்துவை நமக்கு வெளிக்காண்பிப்பது.

## வேதாகமத்தில் இயேசுவைப் பார்த்தல்

எங்கேயிருந்து வெளிக்காண்பிப்பார்? நாம் இந்த வேதாகமத்தை வாசிக்கும்போது இயேசுகிறிஸ்துவின் அழகை அல்லது இயேசுகிறிஸ்துவினுடைய அருமையை அவர் நமக்குக் காண்பிப்பார். ஏசாயா புத்தகத்தை வாசிக்கும்போது அங்கு இயேசு கிறிஸ்துவை வெளிக்காண்பிப்பார். அவர் அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும்.. அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

நம்மை யாரும் அடிக்க வேண்டாம். ஒரு பார்வை பார்த்தாலே போதும். தொட்டாலே போதும்.

நாம் நினைக்கலாம் இயேசுகிறிஸ்துவை எங்கிருந்துதான் காண்பிப்பார்? புதிய ஏற்பாட்டிலிருந்து. அப்படியா? முழு வேதாகமத்திலிருந்தும் காண்பிப்பார். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமில் நாம் யாரைத்தான் பார்ப்போம்? இயேசுகிறிஸ்துவைத்தான் பார்ப்போம். ஈசாக்கில் இயேசுகிறிஸ்துவின் அம்சத்தைப் பார்ப்போம். ஒருநாள் 'ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனைப்'பற்றி பகிர்ந்துகொள்ளலாம். யாக்கோபில் இயேசுகிறிஸ்துவின் அம்சத்தைப் பார்ப்போம். யோசேப்பில் இயேசு கிறிஸ்துவின் அம்சத்தைப் பார்ப்போம். தாவீதில் இயேசு கிறிஸ்துவின் அம்சத்தைப் பார்ப்போம். முழு வேதாகமத்திலும் இயேசுகிறிஸ்துவின் பல்வேறு அம்சங்களைத்தான் நாம் பார்ப்போம். பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் நபரையும், அவருடைய வேலையையும், மிக முக்கியமாக அவர் செய்துமுடித்த வேலையையும் நமக்குக் காண்பிப்பார். அவருடைய சிலுவை மரணத்தை, அவ

ருடைய உயிர்த்தெழுதலை நமக்குக் காண்பிப்பார். இது பரிசுத்த ஆவியானவருடைய முதல் வேலை. ஆகையால், நாம் வேதாகமத்திற்குள் போகும்போது நாம் என்ன செய்யவேண்டும் என்றால், "ஆண்டவரே, இந்த வேதாகமத்தில் நான் உம்மைப் பார்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் என் கண்களைத் திறந்தருள்வீராக," என்று ஜெபிக்க வேண்டும். இந்த இயேசுகிறிஸ்து மிகவும் அழகானவர்.

### இயேசு தம்மை நம் ஆவியில் காண்பித்தல்

கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்தபிறகு சில சீடர்கள் எருசலேமிலிருந்து எம்மாவுக்கு நடந்து போகிறார்கள். லூக்கா 24ஆம் அதிகாரத்தில் நாம் இதைப் பார்க்கிறோம். இயேசுகிறிஸ்து அவர்களுடன் சேர்ந்துகொள்கிறார். அதுபோல ஓர் அசாதாரணமான கூட்டம் வேறு எதுவும் இல்லை என்று நான் நினைக்கிறேன். உயிர்த்தெழுந்தபிறகு 5000 பேருக்குத்தானே செய்தி கொடுக்க வேண்டும்? வெறுமனே இரண்டுபேர். மிகவும் சாதாரணமான சூழ்நிலையில் அவர்களைச் சந்திக்கிறார். No spectacular entry. "இப்போது தேவனுடைய தாசன் இன்னார் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொடுப்பார்" என்று எந்த அறிமுகமும் இல்லை. ரொம்ப சாதாரணமாக நடந்துபோய் தீர்க்கதரிசிகள், நியாயப்பிரமாணம் ஆகியவைகளில் கிறிஸ்து பாடுபடவும், பின்பு மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டும் என்று தம்மைக்குறித்து எழுதப்பட்டவைகளை எடுத்துக்காண்பிக்கிறார். அதே பழைய ஏற்பாட்டைத்தான் அவர்கள் இவ்வளவு நாள் படித்தார்கள். தேவன் அல்லது பரிசுத்த ஆவியானவர் காண்பிக்கும்போதுதான் "ஓ வேதத்தில் இருக்கும் கிறிஸ்து இவரா, இப்படிப்பட்டவரா!" என்று நமக்குத் தெரியும்.

நாம் எப்படிப்பட்ட ஆள் தெரியுமா? 'இயேசுகிறிஸ்து யார் தெரியுமா என்று கேட்டால், தெரியுமே!' என்போம். "அவர் பெத்லகேமில் பிறந்தார். அவரை ஞானிகள் வந்து பார்த்தார்கள்." சரித்திர இயேசுவைப்பற்றிய எல்லாக் காரியங்களையும் நாம் அடுக்கடுக்காகச் சொல்லிவிடுவோம். பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்திலிருந்து இந்த இயேசு கிறிஸ்துவைக் காண்பிக்கிறார். அவர் பாடுபடவும், மகிமைக்குள் பிரவேசிக்கவும் வேண்டும். ஆனால், இவர்தான் இயேசுகிறிஸ்து என்று அவர்கள் இனங்கண்டு கொள்ளவில்லை. ஊருக்குப்போய்ச் சேர்ந்தபிறகு, "நீர் எங்களோடே தங்கியிரும், சாயங்காலமாயிற்று. பொழுதும் போயிற்று," என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அப்போது அவர் அவர்களோடே தங்கினார். அவர்களோடே சேர்ந்து சாப்பிடும்போது அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போதுதான் இவர் யார் என்று அவர்களுக்கு தெரிய வந்தது. இதுதான் சொன்னேன். இயேசுகிறிஸ்து இருமுறை தோன்றுகிறார். ஒருமுறை அவர் நடந்துபோகிற வழியில் தோன்றுகிறார். இன்னொரு முறைதான் நாம் அவரை உண்மையாகப் பார்க்கிறோம். "ஓ இவர் இயேசுகிறிஸ்து!"

### ஆவியில் தோன்றுதல்

இன்னொரு சம்பவம், "சேவல் கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்," என்று ஆண்டவர் பேதுருவிடம் கூறியிருந்தார். இது முதல்முறை கர்த்தர் பேசியது. பேதுரு மூன்றுமுறை மறுதலிக்கிறார். சேவல் கூவுகிறது. அந்த சமயத்தில் இயேசுகிறிஸ்துவை முற்றத்தின்வழியாக பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்கள். அப்பொழுது இயேசுதிரும்பி பேதுருவைப் பார்த்தார். பேதுரு கர்த்தர் சொன்ன வார்த்தைகளை நினைவுகூர்ந்து அப்புறம்போய் மனங்கசந்து அழுதான். இது இயேசுகிறிஸ்து இரண்டாவதுமுறை பேசுவது. இரண்டாவதுமுறை அவர் ஒன்றும் பேசவில்லை. அப்படித் திரும்பிப் பார்த்து, "நான் சொன்னது நினைவிருக்கா?" என்று கேட்பது போல் இருந்தது.

வேதத்திலிருந்து ஆண்டவர் ஒருமுறை பேசுவார். வேதத்திலிருந்து இயேசுகிறிஸ்துவைக் காண்பிப்பார். இன்னொருமுறை அவர் தம்மை எங்கு காண்பிப்பார் என்றால் ஆவியில் காண்பிப்பார். வேறு எதுவுமே மனிதனை மாற்ற முடியாது. 100 தடவை சொல்லலாம். "உன் நகத்தைப்பார். உன் முடியைப் பார். உன் சட்டையைப் பார். உன் குரலைப் பார். நீ பேசுகிற விதத்தைப் பார்," என்று 1000 கட்டளைகள் கொடுத்தாலும் ஒரு மனிதனை மாற்ற முடியுமா? முடியாது. கேட்கும்போதெல்லாம் மிகவும் உபயோகமாகத்தான் இருக்கும். கேட்டு முடித்தபிறகு உபயோகமாக இருக்காது. எப்போதுதான் மாற முடியும் என்று கேட்டால் நான் கேள்விப்பட்ட இயேசுகிறிஸ்து ஆவியில் தோன்ற வேண்டும். ஆனால், அவர் தோன்றுவாரா? நிச்சயமாகத் தோன்றுவார்.

## மகிமையின் தேவன் தோன்றினார்

'மகிமையின் தேவன் ஆபிரகாமுக்குத் தோன்றினார்' என்று வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்போது ஆபிரகாம் தன் இனம், ஜனம், நாடு எல்லாவற்றையும் விட்டுவிட்டு தேவனைப் பின்பற்றி னார். மகிமையின் தேவன் தோன்றும்போது அந்தக் கவர்ச்சி ஒரு மனிதனை மாற்றமுடியுமேதவிர அவனிடம், "நீ இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றினால் உனக்கு அது கிடைக்கும், இது கிடைக்கும்," என்று சொன்னாலும் அவன் மாறமாட்டான். மகிமையின் தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமானார்.

மகிமையின் தேவன் வேதாகமத்தின் பக்கங்களில் நமக்குத் தோன்ற வேண்டும். அதே மகிமையின் தேவன் நம் ஆவியிலும் நமக்குத் தோன்ற வேண்டும். ஆவியில் தோன்றும்போது அவர் FM இல் பேசுவதுபோல் கரகரவென்று பேசுவார் என்று நாம் நினைக்கிறோம். (FMஇல் பேசுகிற சத்தத்தைக் கேட்டால் நான் ரொம்ப tension ஆகி விடுகிறேன். உலகத்திலிருக்கிற எல்லாரும் இப்படிப் பேசினார்கள் என்றால் உலகம்தான் வாழ்வதற்கு மிக மோசமான இடமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது). தேவன் எப்படிப் பேசுவார் என்றால், gentle ஆகப் பேசுவார்.

இயேசுகிறிஸ்து திரும்பி பேதுருவைப் பார்த்தார். அவர் பேதுருவை அற்பமாகப் பார்த்திருப்பார் அல்லது அவரை ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பதுபோலப் பார்த்திருப்பார் என்றா நினைக்கிறீர்கள்? "நீ யார் என்று இப்போது தெரிந்துவிட்டதல்லவா?" என்ற பார்வையோடு பார்த்திருப்பார் என்று நினைக் கிறீர்களா? அவர் எப்படிப் பார்த்தார் என்று தெரியவில்லை. ஆனால், அது ஜீவன் கொடுக்கின்ற பார்வை. பேதுரு மனந்திரும்பினார். நம்முடைய பல பார்வைகள் ஜீவன் கொடுக்கின்ற பார்வை இல்லை.

முதல்முறை தோன்றினார். மகிமையின் தேவன் என் ஆவியிலும் எனக்குத் தோன்றினார். பலதடவை ஆபிரகாமின் தேவன் முதன்முறை தோன்றினார். ஆபிரகாமுக்குத் தேவன் பலமுறை தோன்றினார். இது உங்களுக்குத் தெரியுமா? முதலில் தோன்றினார். மீண்டும் தோன்றினார். மீண்டும் தோன்றினார். பல சமயங்களில் அவர் நம் ஆவியில் நமக்கு மீண்டும் மீண்டும் மீண்டும் தோன்றியிருக்கிறார். அப்போதுதான் ஏலியைப்போல் பார்ப்போம்: "பேசும் கர்த்தாவே, அடியேன் கேட்கிறேன்." அவர் பேசுவதற்குக் களைத்துப்போவதேயில்லை. நமக்குப் பல தடவை தோன்றியபிறகுதான் நாம் கொஞ் சம் திரும்புவோம். "ஓ தோன்றியவர் கர்த்தராக்கும்! கர்த்தராக்கும் தோன்றினார்." என்று சொல்வதற் குள் அவர் மறைந்துவிடுவார். ஆனால், அது போதும். முக்கியமானது அவர் தோன்றிக்கொண்டே இருப்பது இல்லை. ஒரு பாதிப்பை நமக்குள் அவர் உருவாக்க விரும்புகிறார்.

## நடைமுறை வாழ்க்கை

அதுபோல மரிய மகதலேனாள். அவளுக்கு அவர் தோட்டக்காரர்போல் தோன்றினார். "மரியாளே" என்று சொன்னதும், அவர் கர்த்தர் என்று அவள் புரிந்துகொண்டாள். முதலாவது அவருடைய வார்த்தையிலிருந்து கிறிஸ்துவைக் காண்பிக்கிறார். இரண்டாவது 24மணி நேரத்தில் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் ஆவியில் நமக்குத் தோன்றுகிறார். அது ஓர் அசைவாக இருக்கும். ஒரு பார்வையாக இருக்கும். ஒரு மெல்லிய உணர்வாக இருக்கும். அது நமக்குத் தெரியும். எப்படித் தெரியும்? இந்தக் கிறிஸ்துவை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். எம்மாவுக்குப் போகிற வழி யில் இந்தக் கிறிஸ்துவை நான் ஏற்கெனவே வேதாகமத்தில் பார்த்திருக்கிறேன. அல்லது இந்தச் சகோதரனில் இந்தக் கிறிஸ்துவை நான் பார்த்திருக்கிறேன். பலதடவை இயேசுகிறிஸ்து வேதத்தி லிருந்து தோன்றமாட்டார். எங்கிருந்துதான் தோன்றுவார்.? நம்முடைய சகோதர சகோதரிகள் மூல மாகத் தோன்றுவார். வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் சகோதரி நடந்துகொள்கிற அந்த விதத்தை நான் பார்க்கிறேன். இப்போது நான் யாரைப் பார்க்கிறேன். மகிமையின் தேவன் எனக்குத் தோன்றுகிறார். இப்போது நான் அதே போன்ற ஒரு சூழ்நிலை வழியாகப் போகும்போது மகிமை யின் தேவன் எனக்கு என் ஆவியில் தோன்றுகிறார். பவுல் கூறுகிறார். "தேவன் தம்முடைய குமா ரனை என்னில் வெளிப்படுத்த அவருக்கு பிரியமாயிருந்தபோது," ஆயிரம் விவரங்களில் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை நமக்குத் திரைநீக்கிக் காண்பிக்கிறார். மிக நுண்ணிய வகையில், In minute way, in fine way, the Holy Spirit unveils Christ. இது நம்முடைய ஜெபமாக இருக்க வேண் டும்.

இந்தப் பாடல் என்னை மிகவும் தொட்டது. Just let me hear your words of grace; just let me see your radiant face. இதுதான் ஒருவேளை பவுல் சொல்லுகிற 2 கொரிந்தியர் 3:18 கிறிஸ்துவைக் கண்ணாடி

யில் கண்டு பிரதிபலிப்பதோ? நாம் எப்படி கிறிஸ்துவைப் பிரதிபலிப்பது? நாம் எந்த அளவுக்குக் கிறிஸ்துவைக் காண்கிறோமோ அந்த அளவுக்கு அவரைப் பிரதிபலிக்கிறோம். இது நம்முடைய பிரயாசத்தினால் அல்ல. உன் ஆவியில் மீண்டும் மீண்டும் மீண்டும் தோன்றுகிற கிறிஸ்துவைப் பார். பாவம் செய்வதற்குமுன்பு அவர் தோன்றுவார். பாவம் செய்தபிறகும் அவர் தோன்றுவார். இரண்டு முறை தோன்றும்போதும் அவர் கிண்டல்பண்ண மாட்டார். முதலில் தோன்றி அவர் நமக்குக் கிருபையைத் தருவார். சரி அதையும் மீறி பாவம் செய்கிறோம். அவர் அப்போது இரக்கத்தைத் தருவார். வேண்டுமானால் அவர் கொஞ்ச நாள் பேசாமல் இருப்பார். அவர் நம்மோடு இடைப்பட்ட பிறகு மறுபடியும் தோன்றுவார். நாம் ஜெபிக்க வேண்டியிருக்கும். “கர்த்தாவே, தேவனுடைய வார்த்தையிலும், என் ஆவியிலும் நான் உம் அழகைப் பார்க்க விரும்புகிறேன். கிறிஸ்துவாகிய நப ரைப் பார்க்க விரும்புகிறேன். நான் கிறிஸ்துவின் வேலையைப் பார்க்க விரும்புகிறேன். எனக்குத் தோன்றும். என்னைக் கைவிடாதேயும்.”

எபிரெயர் 12இல் பவுல் சொல்லுகிற வசனத்தைப் பார்க்கலாம். “விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமை யோடே ஓடக்கடவோம்.” எந்த இயேசுவை அவர் நமக்குக் காண்பிக்கிறார்? தமக்குமுன்னே உள்ள மகிழ்ச்சியைக் கருதி அவமானத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல் சிலுவையைச் சகித்த இந்த இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார்த்து.. எப்படிப்பட்ட இயேசுகிறிஸ்து என்று பாருங்கள். ஒருமுறை விளம்பினார். இருமுறை பார்த்தேன். உண்மையில் இருமுறை அல்ல. அவர் விரும்பின விளைவு நம்மில் ஏற்படும்வரை அல்லது அந்த நூலிழை நம் வாழ்க்கையில் ஏற்படும்வரை அவர் தோன்றிக் கொண்டேயிருக்கிறார். தோன்றுகிறார் என்றால் என்ன பொருள்? அங்கு ஜீவன் இருக்கிறது. வெவ்வேறு கோணங்களில், அம்சங்களில், கிறிஸ்துவின் அன்பு, கிறிஸ்துவின் ஒளி, கிறிஸ்துவின் பரிசுத்தம், கிறிஸ்துவின் நீதி, கிறிஸ்துவின் பொறுமை, கிறிஸ்துவின் தாழ்மை, கிறிஸ்துவின் சிறுமை, கிறிஸ்துவின் சிலுவை மரணம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், Christ in manifold respects, Until the Father says “Oh the beloved Christ is formed in you.”